www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



35. [illegible] குறித்து எழுதுக.

36. [illegible] எதிர்கொள்ளும் முக்கிய சவால்களை விளக்குக.

37. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.

38. இந்தியப் பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை?

39. GDP ஐ கணக்கிடும் முறைகள் யாவை? அவைகளை விவரி?

40. உலகவர்த்தக அமைப்பு பற்றி எழுதுக.

41. கீழ்க்காண்பனவற்றிக்கு காலக்கோடு வரைக.
1910 முதல் 1940 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக் கோட்டில் எழுதுக.

42. உலக வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களை குறிக்கவும்.
i) கிரேட் பிரிட்டன் ii) பிரான்ஸ் iii) துருக்கி
iv) ஹிரோஷிமா v) மொறாக்கோ

## பகுதி - IV

குறிப்பு : பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும். 2x8=16

43. அ) பன்னாட்டு சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக.

*(அல்லது)*

ஆ) பல்நோக்குத் திட்டம் என்றால் என்ன? ஏதேனும் இரண்டு இந்திய பல்நோக்கு திட்டங்கள் பற்றி எழுதுக.

44. அ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.
i) மேற்கு தொடர்ச்சி மலைகள் ii) எவரெஸ்ட்
iii) பாக்ஜலசந்தி iv) கோதாவரி ஆறு
v) மலைக்காடுகள் vi) அதிக மழைப்பெரும் பகுதி
vii) வண்டல் மண் காணப்படும் பகுதி viii) மும்பை

*(அல்லது)*

ஆ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.
i) ஆரவல்லி மலைத் தொடர்கள் ii) மாளவபீடபூமி
iii) மன்னார் வளைகுடா iv) நர்மதை ஆறு
v) தென்மேற்கு பருவகாற்று வீசும் திசை vi) மாங்குரோவ் காடுகள்
vii) பக்ராநங்கல் அணை viii) கல்கத்தா

*******

US-MC 10SS-PQ

# மாதிரி காலாண்டுத் தேர்வு - 2024

பத்தாம் வகுப்பு

## சமூக அறிவியல்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 100

அறிவுரைகள்: 1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப் பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

குறிப்பு: இவ்வினாத்தாள் நான்கு பகுதிகளைக் கொண்டது.

## பகுதி - I

குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 14x1=14
ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. "ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்" எனக் கூறியவர் யார்?
அ) லெனின் ஆ) மார்க்ஸ்
இ) சன் யாட் சென் ஈ) மா சே துங்

2. லத்தீன் அமெரிக்காவுடன் 'அண்டை நாட்டுடன் நட்புறவு' எனும் கொள்கையைக் கடைபிடித்த அமெரிக்க குடியரசுத்தலைவர் யார்?
அ) பிராங்க்ளின் D. ரூஸ்வெல்ட் ஆ) ட்ரூமன்
இ) உட்ரோவில்சன் ஈ) ஐசனோவர்

3. ஜப்பான் சரணடைவதாக எப்போது முறைப்படி கையெழுத்திட்டது?
அ) செப்டம்பர் 2, 1945 ஆ) அக்டோபர் 2, 1945
இ) ஆகஸ்ட் 15, 1945 ஈ) அக்டோபர் 12, 1945

4. சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்:
i. இராஜாராம் மோகன்ராய் ஒரு கடவுள் கோட்பாட்டை போதித்தார்.
ii. அவர் உருவ வழிபாட்டை ஆதரித்தார்.
iii. சமூகத்தீமைகளைக் கண்டனம் செய்வதை எதிர்த்து அவர் சிற்றேடுகளை வெளியிட்டார்.
அ) (i) சரி ஆ) (i), மற்றும் (ii) ஆகியன சரி
இ) (i), (ii) மற்றும் (iii) ஆகியன சரி ஈ) (i) மற்றும் (iii) சரி

5. அன்னிபெசன்ட் பிரம்மஞானக்கருத்துக்களைப் பரப்புவதற்கு பயன்படுத்திய செய்தித்தாள்கள் ....................
அ) நியூ இந்தியா ஆ) ஒரு பைசா தமிழன்
இ) குலாம்கிரி ஈ) திராவிட பாண்டியன்

6. மேற்கு கடற்கரையின் வடக்கு பகுதியில் உள்ள கடற்கரை ...................
அ) கொங்கணகடற்கரை ஆ) மலபார் கடற்கரை
இ) வடசர்க்கார் ஈ) சோழ மண்டல கடற்கரை

Scanned with OKEN Scanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



7. உலகிலேயே மிக நீளமான அணை ....................
   அ) மேட்டூர் அணை
   ஆ) கோசி அணை
   இ) ஹிராகுட் அணை
   ஈ) பக்ராநங்கல் அணை

8. இந்தியாவில் தங்க இழைப்பயிர் என அழைக்கப்படுவது ....................
   அ) பருத்தி
   ஆ) கோதுமை
   இ) சணல்
   ஈ) புகையிலை

9. இந்தியாவில் முதல் அணுமின் நிலையம் நிறுவப்பட்ட இடம்
   அ) குஜராத்
   ஆ) இராஜஸ்தான்
   இ) மகாராஷ்டிரம்
   ஈ) டார்ஜிலிங்

10. இந்தியாவின் முக்கிய இறக்குமதி பொருள் ....................
   அ) சிமெண்ட்
   ஆ) ஆபரணங்கள்
   இ) தேயிலை
   ஈ) பெட்ரோலியம்

11. எந்த பிரிவின் கீழ் நிதிநிலை அவசரநிலையை அறிவிக்கமுடியும்?
   அ) சட்டப்பிரிவு 352
   ஆ) சட்டப்பிரிவு 356
   இ) சட்டப்பிரிவு 360
   ஈ) சட்டப்பிரிவு 368

12. இந்திய மாநிலங்களின் எல்லைகளை மாற்றியமைக்கும் அதிகாரம் பெற்றவர்/பெற்ற அமைப்பு.
   அ) குடியரசு தலைவர்
   ஆ) பிரதம அமைச்சர்
   இ) மாநில அரசாங்கம்
   ஈ) நாடாளுமன்றம்

13. இந்தியா எப்போது டங்கல் திட்டத்தில் கையெழுத்திட்டது?
   அ) 1984 ஆ) 1976 இ) 1950 ஈ) 1994

14. உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தம் .................... ஆம் ஆண்டு அமுலுக்கு வந்தது.
   அ) ஜனவரி 1, 2005
   ஆ) ஜனவரி 26, 1950
   இ) ஜனவரி 1, 1995
   ஈ) ஜனவரி 10, 2001

## பகுதி - II

குறிப்பு : எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண்: 28 க்குக் கட்டாயமாக விடையளிக்கவும். 10x2=20

15. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

16. பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மையின் மீது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது?

17. முத்துத் துறைமுக நிகழ்வை விவரி.

18. பிரெட்டன் உட்ஸ் இரட்டையர்களின் பெயர்களை குறிப்பிடுக.



19. மார்ஷல் திட்டம் என்றால் என்ன?

20. பிரம்ம சமாஜத்தால் ஒழிக்கப்பட்ட சமூகத்தீமைகள் யாவை?

21. தக்காண பீடபூமி குறிப்பு வரைக.

22. "வெப்ப குறைவு விகிதம்" என்றால் என்ன?

23. இந்தியாவின் வேளாண்மை முறைகளை குறிப்பிடுக.

24. நீதிப்பேராணை என்றால் என்ன?

25. இந்தியக் குடியரசுத்தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?

26. உயர் நீதிமன்றத்தின் தனக்கே உரிய நீதிவரையறை அதிகாரங்கள யாவை?

27. மொத்த உள்நாட்டு உற்பத்தி என்றால் என்ன?

28. உலகமயமாக்கலை சார்ந்த சீர்த்திருத்தங்கள் யாவை?

## பகுதி - III

குறிப்பு : எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண்: 42 க்குக் கட்டாயமாக விடையளிக்கவும். 10x5=50

29. *கோடிட்ட இடங்களை நிரப்புக.*
   i) பாரிஸ் அமைதி மாநாட்டில் பிரதிநிதியாகப் பங்கேற்ற பிரான்ஸின் பிரதமர் .................... ஆவார்.
   ii) "ஒரு பைசா தமிழன்" பத்திரிக்கையைத் துவக்கியவர் .................... ஆவார்.
   iii) .................... ஆம் ஆண்டில் லொக்கர்னோ உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது.
   iv) இந்தியாவின் முதல் நீர் மின்நிலையம் 1897 ஆம் ஆண்டு .................... நிறுவப்பட்டது.
   v) சம நீதிகண்ட சோழனின் சிலை .................... உயர் நீதிமன்றவளாகத்தில் அமைந்துள்ளது.

30. ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோடிட்டுக் காட்டுக.

31. இரண்டாம் உலக போரின் விளைவுகளை ஆய்வுசெய்க.

32. 19-ஆம் நுற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் நடைபெறுவதற்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளை விவாதிக்கவும்.

33. அ. வேறுபடுத்துக.
   i) வானிலை மற்றும் காலநிலை
   ii) புதுப்பிக்க இயலும் மற்றும் புதுப்பிக்க இயலா வளங்கள்

   ஆ. காரணம் கூறுக
   வேளாண்மை இந்தியாவின் முதுகெலும்பு

34. இமயமலையின் உட்பிரிவுகளையும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரி.

www.Padasalai.Net
Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com